

டேனியல் பூன்

கதை :

டாம் ஸ்ட்ரெய்ஸ்கட்

ஓவியங்கள் :

லோரன் சான்ட்லான்ட்

டேனியல் பூன்

கதை : டாம் ஸ்ட்ரெய்ஸ்கட்

ஓவியங்கள் : லோரன் சான்ட்லான்ட்

தமிழில் ; அருண்குமார் ஆண்டவன்



ஆசிரியர் குறிப்பு

டேனியல் பூன்   1734 ல் பிறந்த போது, ஐக்கிய அமெரிக்க ஒன்றியம் தோன்றியிருக்கவில்லை. 1500 களின் பிற்பகுதியிலிருந்து ஐரோப்பியர்கள் வடஅமெரிக்காவின் கிழக்கு

பகுதிகளில் சிறிய காலனிகளாக குடியேறினர், அப்படி குடியேறியவர்கள் அந்நிலமானது ஏற்கனவே அவர்கள் பொதுவாக இந்தியர்கள் என அழைக்கும் வேறு பல மக்களுக்கு சொந்தமானது என்பதை அறிந்தனர். புதிய குடியேறிகள் அல்லது காலனியவாதிகள், இந்தியர்களின் நிலங்களை துண்டுதுண்டாக வாங்கவும், அபகரிக்கவும் தொடங்கினர்.

டேனியல் வளரும்போது, அமெரிக்க காலனிகளும் கூடவே வளர்ந்து வந்தன. அதிகப்படியான குடியேற்றங்கள் நிகழ்ந்து, குடும்பங்களில் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாகியபோது, அவர்களுக்கு விவசாயம் செய்ய அதிகப்படியான நிலம் தேவைப்பட்டது. எனவே அவர்கள் இந்தியர்கள் மட்டுமே வாழும் காடுகளின் உள்பகுதிகளுக்கு நகரத்தொடங்கினர். குடியேற்றவாசிகள் பசி, காட்டு விலங்குகள் மற்றும் தங்களின் தாய்நிலத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்திலிருந்த இந்தியர்களின் தாக்குதல் ஆகியவற்றை எதிர்கொண்டனர். இவர்களில் முதலாமவரும், மிகவும் புகழ்பெற்றவருமான அமெரிக்க முன்னோடி டேனியல் பூன். இது அவரது கதை.





எக்ஸிடர் , பென்சில்வேனியா , 1740

இளைஞான டேனியல் பூனால் வீட்டினுள் அடங்கி அமர முடியவில்லை.

அவனது வீட்டின் அருகில் இருக்கும் காட்டினுள் சுற்றித்திரியவும், விளையாடவும் அவன் விரும்பினான்.

டேனியல் பறவைகளின் அழைப்பொலியை பின்தொடர்ந்து சென்றான்.

அவன் நிலத்தின் மேல் மான்களின் காலடித்தடங்களை தேடிக்கொண்டே, சத்தமெழுப்பாமல் நடக்க முயற்சிசெய்தான்.



டேனியலுக்கு ஆறு வயதாக இருந்த போது எக்ஸிடரில் பெரியம்மை நோய் பரவியது.

அந்நோய் எண்ணிலடங்கா மக்களை கொன்றது.

அந்நோயிலிருந்து தங்களது குழந்தைகளைப் பாதுகாக்க சாரா மற்றும் ஸ்கொயர் பூன் ஆகியோர் அவர்களை வீட்டின் உள்ளேயே இருக்கச் சொன்னார்கள்

ஆனால் டேனியல் வீட்டினுள்ளேயே அடைபட்டு கிடப்பதை வெறுத்தான்.

இதனால் டேனியல் ஒரு திட்டம் வகுத்தான்.

ஒருவேளை அவனுக்கு பெரியம்மை வந்துவிட்டால் அவனது பெற்றோர்கள் அவனை சுதந்திரமாக விட்டுவிடுவார்கள்.

எனவே ஒருநாள் இரவு டேனியலும் அவனது சகோதரி எலிசபெத்தும் வீட்டிலிருந்து ரகசியமாக வெளியேறினர்.

அவர்கள் பதுங்கிப் பதுங்கி பக்கத்து வீட்டினுள் மெதுவாக சென்றனர்.

பிறகு அவர்கள் அவ்வீட்டில் ஏற்கனவே பெரியம்மை வந்த நண்பனின் படுக்கையில் தவழ்ந்து சென்று படுத்துக்கொண்டனர்.

சில நாட்கள் கழித்து டேனியலுக்கு உடல் நலிவும் , நோய் தொற்றும் ஏற்பட்டது.

ஆனால் அவன் இறக்கவில்லை.


சிறிது-நாட்களிலேயே அவன் மீண்டும் காடுகளில் உலாவ சென்றுவிட்டான்.



டேனியல் உடல் ஆரோக்கியமானவனாக வளர்ந்தான்.

அவனால் நாட்கணக்காக நடக்க முடியும், மணிக்கணக்காக விறகுகளை பிளக்கவும் முடியும்.





டேனியல் காட்டில் நிறைய வேட்டைக்காரர்களைச் சந்தித்தான்.

அவன் அவர்களது கதகதப்பான கணப்புத்தீயின் அருகில் அமர்ந்துகொண்டான்.

வேட்டைக்காரர்கள் அவனுடன் அவர்களது உணவையும், வனம் குறித்த கதைகளையும் பகிர்ந்துகொண்டார்கள்.



டேனியல் பல பூர்வக்குடி இந்தியர்களையும் கூட சந்தித்தான்.

வெள்ளைநிற குடியேறிகள் வந்தபோது ஷாவ்னி, டெலாவேர் மற்றும் பிற பூர்வக்குடிகள் ஏற்கனவே பென்சில்வேனியாவில் வாழ்ந்து வந்தனர்..

பல அமெரிக்க காலனியவாதிகள் இந்தியர்கள் அவரகளைச் சுற்றி வாழ்வதை விரும்பவில்லை.




அவர்கள் அந்நிலத்தை தங்களுக்கானதாக்கிக்கொள்ள விரும்பினர்.

டேனியல் இந்திய வேட்டைக்காரர்களிடமிருந்து பல விஷயங்களை ஆர்வமாக கற்றுக்கொண்டான்.


அவன் பலமுறை அவர்களுடன் காடுகளில் சுற்றித் திரிந்தான், அவர்களுடைய சில சொற்களைக் கற்றுக்கொண்டான் மற்றும் இந்தியர்களுடைய முடியைப் போல தனது முடியையும் முடிந்துகொண்டான்.



டேனியலின் நண்பர்கள் அவனுக்கு நிறைய விஷயங்களை கற்றுத்தந்தனர். எப்படி விலங்குப் பொறிகளை அமைப்பது என்பதையும், நீளமான துப்பாக்கிகளை எப்படி கையாள்வது என்பதையும் அவன் கற்றுக்கொண்டான்.



அவன் ஷாவ்னீ வேட்டையரைப் போல கரடியையும், மானையும் தடமறிந்து பிடிப்பதை அறிந்துகொண்டான்.



டேனியல் தனியாக இருக்கும் போதும், அடர்ந்த காடுகளில் அலைந்து திரியும் போதும் மகிழ்ச்சியாக உணர்ந்தான்.


அவன் கொட்டைகளையும், பெர்ரிகளையும் உண்டான்.

அவன் வேட்டையாடிய விலங்குகளை தோலுரித்து, சமைத்து உண்டான்.

டேனியல் பூன் மலைகள் மற்றும் பள்ளத்தாக்குகளில் தனது சொந்த பாதையை உருவாக்கிக்கொள்ளும் துடிப்புமிக்க இளைஞனாக வளர்ந்தான்.

அவனால் ஆறுகள் மற்றும் ஓடைகளை கடக்க முடியும், காற்றின் தடங்களை அறிய முடியும் மற்றும் காட்டில் தொலைந்து போகாமல் இருக்க முடியும்.







வனக்கிராமம், 1750

டேனியல் 15 வயதை அடைந்த போது, மற்ற குடும்பங்களைப் போல, பூன் குடும்பமும் எக்ஸிடரை விட்டு வெளியேறியது.

அவர்கள் புதிய நிலத்தில் குடியேறி ,தங்க விரும்பினர்.

வளர்ந்து வரும் அமெரிக்க காலனிகளில் அவர்கள் தங்களுக்கான சொந்த இடத்தை கண்டறிய விரும்பினர்.

அந்தப் பயணமானது நீண்டதாகவும், கடினமானதாகவும் இருந்தது.

ஆனால் மற்றவர்களைவிட டேனியல் வழித்தடங்களையும் , காடுகளையும் நன்கு அறிந்தவன்.

அவனது குடும்பம், அவர்களை தெற்கு நோக்கி வழிகாட்டி அழைத்துச் செல்ல அவனை நம்பியது.

பூன்கள் வடக்கு கரோலினாவில் இருக்கும் யாட்கின் நதிப் பள்ளத்தாக்கை நோக்கிச் சென்றனர்.

இந்த காட்டுப் பகுதியானது குறைந்த குடியேறிகளைக் கொண்டிருந்தது, அங்கு நகரங்கள் எதுவும் இல்லை.

விவசாயிகள் உழுவதற்காக காத்திருக்கும் நல்ல நிலங்கள் அப்பகுதி முழுவதும் இருப்பதாக ஸ்கொயர் பூன் கேள்விப்பட்டிருந்தார்.



நீண்ட பயணத்திற்குப் பிறகு பூன்கள் யாட்கின் நதிப் பள்ளத்தாக்கை அடைந்தனர். அந்நிலத்தை சுத்தம் செய்ய டேனியல், ஸ்கொயர் பூனுக்கு உதவினான். தந்தையும் மகனும் பெரிய பாறைகளை நகர்த்தினர். புதைந்திருந்த அடிமரக்கட்டைகளை தோண்டி எடுத்தனர்.

பிறகு அவர்கள் சோளம் மற்றும் கோதுமை பயிரிட்டனர். இந்த வேலைகள் டேனியலை சோர்வுக்கும், சலிப்பிற்கும் தள்ளின. அறுவடைக்குப் பிறகான ஒவ்வொரு இலையுதிர்க காலத்திலும் அவன் தனது நீளமான துப்பாக்கியை வெகு ஆர்வத்துடன் எடுத்துக்கொள்வான்.


தன் குடும்பத்தின் குளிர்காலத் தேவைகளை சமாளிக்க அவன் உணவிற்காக ஒருவார காலம் வேட்டையாடுவான்..

விற்பனை செய்வதற்காக அவன் விலங்குகளின் தோல்கள் மற்றும் பதப்படுத்தாத தோல்களையும் சேகரித்தான்.

டேனியல் எப்போதும் அவனது நீண்ட துப்பாக்கியால் மிகக்கவனமாக குறி வைப்பான்.

அவன் கூர்மையான கண்களையும், நிதானமான கைகளையும் கொண்டிருந்தான்.

நல்ல பருவம் ஒன்றில், அவன் 99 கரடிகளை வேட்டையாடினான்.



1753ல் டேனியல் இளமையான அண்டைவீட்டுப் பெண்ணான ரெபெக்கா ப்ரையனை சந்தித்தான்.

ரெபெக்கா நேருக்கு நேராக தனது கண்களை பார்த்ததை டேனியல் ரசித்தான்.

அவனது அலைந்து திரியும் வாழ்க்கையை அவள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை, மேலும் அவள் அவனைப் போலவே பிடிவாதக்காரியாக இருந்தாள்.


மூன்று ஆண்டுகள் கழித்து டேனியலும்; ரெபெக்காவும் திருமணம் செய்துகொண்டனர்


அவர்கள் தங்களது சொந்த பண்ணைக்கு குடிபெயர்ந்தனர். .1757 ல் ரெபெக்காவிற்கு ஜேம்ஸ் என்னும் மகன் பிறந்தான்.

அடுத்தடுத்த ஆண்டுகளில் அவள் ஒன்பது குழந்தைகளை பெற்றெடுத்தாள்.

ஜேம்ஸ் பெரியவனான பின்பு, டேனியல் அவனை வேட்டைக்காக மலைகளுக்கு அழைத்துச் சென்றான்

இரவு நேரங்களில் அவர்கள் கணப்புத்தீக்கு அருகில் படுத்துக்கொள்வார்கள், அவனது மகனை கதகதப்பாக வைத்துக்கொள்ள டேனியல் அவனுக்கு மான்தோலாலான குளிராடையை போர்த்திவிடுவான்.





வேறு பல குடும்பங்கள் பூன்களை பின்தொடர்ந்து யாட்கின் நதி பள்ளத்தாக்கில் குடியேறினர்.

வேட்டை விலங்குகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. டேனியல் அப்பலாச்சியன் மலைத்தொடருக்கு அப்பால், மேற்கு பக்கமாக இருந்த நிலத்தைப் பற்றிய கதைகளை கேட்டிருக்கிறான்.

அவனது பழைய நண்பனான ஜான் ஃபின்ட்லே கென்டக்கி- யை பற்றிய அனைத்தையும் அவனுக்கு கூறியிருக்கிறான்.

இந்த நிலப்பரப்பில் எருமை, கடமான், மான் மற்றும் கருப்பு கரடிகள் உலவிக்கொண்டிருக்கும் என ஃபின்ட்லே கூறியிருக்கிறான்.

பசுமையான புல்வெளிகள் மற்றும் தெளிவான ஓடைகள், மரங்கள் செறிந்த குன்றுகளுக்கு இடையில் அமைந்திருந்தன.

டேனியல் கவனமாக கேட்டான்.


கென்டக்கியில் அவன் மீண்டும் சுதந்திரமாக அலைந்து திரிய முடியும்.

அப்பகுதியில் குடியிருப்புகளை உண்டாக்க அவனால் உதவ முடியும்.

அவன் ஸ்கொயர் பூனைப் போல அவனது குழுவின் தலைவனாக இருக்க முடியும்.

டேனியல் அவன் மனதைத் தயார்செய்து கொண்டான்.

அவன் மேற்கு திசையில் அமைந்த மலைத்தொடர்களுக்கு அப்பால் இருக்கும் திறந்த நிலப்பரப்பை நோக்கிச் செல்ல தீர்மானித்தான்



கென்டக்கி பகுதியில்

1769 இல் டேனியல் பூன் மற்றும் அவனது மற்ற ஐந்து கூட்டாளிகள் இணைந்து கம்பர்லேண்ட் கணவாய் வழியாக மலைத்தொடரைக் கடந்தனர்.

அந்த நிலப்பரப்பானது ஃபின்ட்லே கூறியது போல வளமானதாக இருந்தது.

அவர்கள் மாதக்கணக்கில் வேட்டையாடியும், கூண்டுளை வைத்து விலங்குகளை பிடித்தும் வந்தனர். ஆனால் அவர்கள் அங்கு தனியாக இருக்கவில்லை.

அங்கு ஏற்கனவே ஷாவ்னீ இந்தியரக்ளும் வாழ்ந்து வந்தனர்.

ஒருநாள் ஷாவ்னீ வீரர்களின் குழு ஒன்று டேனியலின் முகாமிற்குள் அதிரடியாக நுழைந்தது.

அவர்கள் வெள்ளையர்கள் வைத்திருந்த விலங்குத் தோல்கள் மற்றும் அவர்களின் குதிரைகளை அபகரித்துச் சென்றனர்.

ஷாவ்னீ குழுத் தலைவனான கேப்டன் வில், வெள்ளை வேட்டையர்கள் கென்டக்கி பகுதியிலிருந்து உடனடியாக வெளியேறவேண்டும் எனவும் திரும்பவும் அங்கு வரக்கூடாதெனவும் கடுமையாக எச்சரித்தான்.

டேனியலும், ஜான் ஸ்டீவர்டும் ஷாவ்னீ வீரர்களை பின்தொடர்ந்து அவர்களுடைய குதிரைகளை மீட்டுக்கொண்டு வந்தனர். ஆனால் ஷாவ்னீக்கள் அவர்கள் இருவரையும் துரத்திப்பிடித்தனர்.

அடுத்த ஏழு நாட்களில் டேனியலும், ஜானும் அவர்களின் பிடியிலிருந்து தப்பினர். ஆனால் ஷாவ்னீக்கள் மீண்டும் அவர்களை துரத்தவில்லை.

இந்த திடீர்த்தாக்குதலால் டேனியலின் கூட்டாளிகளில் சிலர் அச்சம் கொண்டனர். சிலர் கிழக்குத் திசை நோக்கித் திரும்பிச் சென்றனர்.


ஆனால் டேனியல் அவனது கனவை கைவிடவில்லை. அவன் வேவு பார்த்துக்கொண்டும், வேட்டையாடிக் கொண்டும் மற்றும் கண்ணி வைத்து விலங்குகளை பிடித்துக்கொண்டும் என ஓராண்டுக்கும் மேலாக கென்டக்கி பகுதியில் பதுங்கி வாழ்ந்து கொண்டிருந்தான்.

அவன் ஒரு மாத காலம் நீளும் பயணங்களை தனியாகவே மேற்கொண்டான். குன்றுப்பகுதிகளில் இருந்த குகைகளில் வசித்தான், ஆற்றுப் படுகைகளில் சாய்வான கூரைகளை அமைத்துக் கொண்டான்.

அவனுக்குத் துணையாக இருக்கத் தனக்குத் தானே பேசிக்கொண்டும், சத்தமாக பாடிக்கொண்டும் இருந்தான்.

டேனியல் அவனால் இயன்ற அளவு அந்நிலத்தைக் குறித்து அனைத்தையும் அறிந்து வைத்திருந்தான்.

அங்கு குடியேறுவதற்கு சரியான நேரம் வரும்போது, அவன் அதற்குத் தயாராக இருப்பான்.



இறுதியாக டேனியல் 1771 ஆம் ஆண்டின் வசந்தத்தின் ஓர் இரவு வேளையில் தனது வீட்டிற்கு திரும்பினான். அங்கு ரெபெக்கா கேளிக்கை விருந்தில் சிரித்துக்கொண்டும், நடனமாடிக்கொண்டும் இருப்பதைப் பார்த்தான். .



டேனியல் அவனது மனைவியிடம் நெருங்கி அவளை தன்னுடன் நடனமாட அழைத்தான். ஆனால் அவள் அழுக்கான, நீண்ட தலைமயிர்களைக் கொண்ட அந்நியனிடமிருந்து விலகினாள். பிறகு அவள், சாந்தமான மற்றும் பிரியமான தனது விருப்பத்திற்குரிய கணவனின் குரலைக் கண்டுகொண்டாள்.





டேனியல் மீண்டும் தனது குடும்பத்துடன் சேர்ந்து வாழத்துவங்கினான்.

ஆனால் அவன் வளமான நாட்டுப்புறப் பகுதியான கென்டக்கியை மறக்கவில்லை.

இரண்டு ஆண்டுகள் கழித்து அப்பகுதியில் வீடுகள் கட்டி குடியேறும் நம்பிக்கையுடன் அவன் அப்பகுதிக்கு சில குடும்பங்களை குழுவாக வழிநடத்திச் சென்றான்.

ரெபெக்காவும், பூனின் குழந்தைகளும் அக்குழுவில் அடங்குவர்.

குடியேறிகள் உணவுகள், உடைகள், துப்பாக்கிகள், உபகரணங்கள், குதிரைகள் மற்றும் சில கால்நடைகளையும் தங்களுடன் எடுத்து வந்தனர்.

சிறிய குழந்தைகள் குதிரைகளின் மேல் கூடைகளில் அமர்த்தி வைக்கப்பட்டு பயணம் செய்தனர்.



டேனியல், கம்பர்லேண்ட் கணவாய் நோக்கிய குறுகலான வழித்தடங்கள் வழியே தனது குழுவை வழிநடத்திச் சென்றான்.

அவர்கள் ஷாவ்னீ மற்றும் செரோக்கி இந்தியர்களின் வேட்டைப்பகுதிகளின் ஊடாக பயணிப்பதால் கவனமாக இருக்க வேண்டி இருந்தது.



அவன் எதிர்ப்பார்த்ததை விட இந்தப் பயணம் கடினமாக இருந்ததை டேனியல் உணர்ந்தான். மேலதிகமான உணவை கொண்டுவருவதற்காக அவன் தனது மகன் ஜேம்ஸ் அடங்கிய ஒரு குழுவை திருப்பி அனுப்பினான். அடுத்த நாள் டேனியல் பயங்கரமான ஒரு செய்தியைக் கேட்டான்.

இந்தியர்கள் ஜேம்ஸின் முகாமைத் தாக்கினர்.

ஜேம்ஸைக் கண்டுபிடிக்க டேனியல் அவனது தம்பி ஸ்கொயரை அனுப்பி வைத்தான்.

ஒருவேளை பயணக்குழுவிற்கு வேறு ஏதேனும் தாக்குதல் வந்தால் அதைத் தடுக்க டேனியல் அவர்களுடன் இருந்தான்.

ஸ்கொயர் திரும்பி வந்து டேனியலிடம் ஜேம்ஸ் இறந்துவிட்டதாகச் சொன்னான், அவனுடன் பலவீரர்களும் இறந்துவிட்டதாகக் கூறினான்.

ஸ்கொயர் அவர்களது சடலங்களைக் கண்டுபிடித்து அங்கேயே எரித்துவிட் டான்.



குடியேறிகள் அச்சம் கொண்டனர்.

இந்தியர்கள் தங்களது நிலத்தை பாதுகாக்க சண்டையிட்டனர்.

கென்டக்கி மிக அபாயகரமானதாக தோற்றமளித்தது.

பெரும்பாலான குடியேறிகள் திரும்பிச் சென்றனர்.


ஆனால் பூன்கள் குளிர்காலத்தின் போது கென்டக்கி பகுதிக்கு அருகில் முகாமிட்டனர்.


அடுத்த வசந்த காலத்தில் டேனியல் தனது மகனின் தனிமையான சமாதியைக் காணச் சென்றான்.

அவன் அந்த சமாதியை குழிதோண்டும் ஓநாய்களிடமிருந்து பாதுகாக்க மூடிவைத்தான்.

சாம்பல் நிறமான மங்கலான வானிலிருந்து திடீரென புயற்காற்று சுழன்று கிளம்பியது.

டேனியல் சமாதியின் அருகில் அமைதியாக அமர்ந்து அழத்தொடங்கினான்.





ஒரு காட்டுப் பாதை

டேனியல் பூன் தனது மகனை கென்டக்கியில் இழந்தான். ஆனாலும் அவன் அந்த அழகிய, பசுமையான நிலத்தில் வாழ விரும்பினான்.

டேனியல் மீண்டும் கென்டக்கிக்கு திரும்பிவர ரிச்சர்ட் ஹெண்டர்சன் என்ற மனிதர் ஒரு வாய்ப்பளித்தார்.

ஹெண்டர்சன் கென்டக்கிக் காட்டுப்பகுதியில் ஒரு சாலை போடவும், அங்கு ஒரு நகரத்தை உருவாக்கவும் விரும்பினார்.

அவர் செரோக்கி இந்தியர்கள் அந்நிலத்தை விட்டுக்கொடுக்க சம்மதிக்க வைப்பதற்கு டேனியலின் உதவியை நாடினார் மற்றும் சாலையை அமைக்கும் பணிக்கு டேனியல் தலைமையேற்றுக் கொள்ள விரும்பினார்.


அதற்கு கைம்மாறாக டேனியல் 2000 ஏக்கர் நிலத்தைப் பெற்றுக்கொள்வான்.



1775 ன் முற்பகுதிகளில் டேனியல் மற்றும் ரிச்சர்ட் ஹென்டர்சன் செரோக்கி பழங்குடிகளை சந்தித்தனர்.

டேனியல் அவர்களிடம் வெள்ளையர்கள் எங்கு குடியேற விரும்புகிறார்கள் என தெரிவித்தான்.

செர்ரோக்கிகள் அந்நிலத்தை விற்க சம்மதம் தெரிவித்தனர், ஆனால் மற்ற இந்தியர்கள் இன்னும் அங்குதான் வாழ்கின்றனர் என டேனியலையும், ஹெண்டர்சனையும் எச்சரித்தனர்.



மார்ச் மாதத்தில் வடக்கு டென்னஸி பகுதியில் டேனியல் 50 ஆட்களைத் திரட்டினான்.

அவர்கள் எல்லாம் ஒன்றாக இணைந்து காட்டுச் சாலையை அமைத்துவிட முடியும்.


அவர்கள் ‘வாரியர்ஸ் பாத்’ என்று அழைக்கப்பட்ட இந்திய வழித்தடங்களுக்கு இணையாக பணியைத் தொடங்கினர்.

வேலை ஆட்கள் மரங்களை வெட்டினர், அடர்த்தியான புதர்களை அழித்துச் சென்றனர்.



அவர்கள் சதுப்பு நிலங்கள் மற்றும் சிற்றோடைகளின் மேல் மரப்பாலங்களை கட்டினர். மழைக்காலங்களில் அவர்கள் சேற்றுப்பாதைகளின் ஊடே சிரமப்பட்டனர், பனிக்காலத்தில் பனிபடர்ந்த பாதைகளில் வழுக்கி விழுந்தனர்.





டேனியலும் அவனது ஆட்களும் கென்டக்கி நதியை ஏப்ரல் மாதத்தில் அடைந்தனர்.

பெருக்கெடுத்து ஓடும் நதியானது அப்பகுதியை தாக்குதல்காரர்களிடமிருந்து பாதுகாக்க கூடும்.

அவர்கள் மரத்தாலான வீடுகளைக் கட்டத்தொடங்கினர். அவர்களை அவ்விடத்திற்கு தலைமையேற்று வழிநடத்தி வந்தவரின் நினைவாக அப்பகுதிக்கு பூன்ஸ்பரோ என பெயரிட்டனர்.



இரண்டு வார பணிக்குப் பிறகு அவர்கள் கிட்டத்தட்ட கென்டக்கியை நெருங்கிவிட்டனர்.

ஆனால் இந்தியர்கள் சாலை பணியாளர்களைத் தாக்கினர்.

அவர்கள் இரண்டு பேரைக் கொன்றுவிட்டு மற்றொருவரை காயத்துடன் விட்டுச் சென்றனர்.

நிறைய பணியாளர்கள் திரும்பிச் சென்றனர், ஆனால் டேனியல் தொடர்ந்து முன்சென்றான்.

அவன் அங்கு குடியேறுவான் அல்லது அதற்கு முயற்சித்து இறப்பான்.


அவ்வருடத்தின் கோடையில் டேனியல் அவனது குடும்பத்திடம் சென்று சேர்ந்தான்


பூன்கள் அவர்களது பொருட்களான மரச்சாமான்கள், உணவுகள், உடைகள், கால்நடைகள் மற்றும் விலங்குகளை எடுத்துக்கொண்டு புறப்பட்டனர்.

அவர்கள் கென்டக்கி பகுதியில் டேனியல் அமைத்த காட்டுச் சாலையை பின்தொடர்ந்து சென்றனர்.

1775 செப்டம்பர் 8 ஆம் நாள் டேனியல் மற்றும் ரெபெக்கா அவர்களது புதிய இல்லத்திற்கு குடியேறினர். பூன்ஸ்பரோவில் தங்களது புதிய வாழ்க்கையை அமைக்கத் தொடங்கினர்.







டேனியல் பூன் , 1820

பின்னுரை ~~பின்குறிப்பு~~

அடுத்த மூன்று ஆண்டுகள் பூன்ஸ்பரோ மக்களை அபாயத்திலும், வறுமையிலும் டேனியல் தலைமை தாங்கி வழிநடத்திச் சென்றான். அந்நகரம் அனைத்திலிருந்தும் தப்பியது மற்றும் பலகாலமாக காட்டுச் சாலையானது ஆயிரக்கணக்கான குடியேற்றக்காரர்களுக்கு மேற்கு நோக்கி செல்லும் வழியாக இருந்தது.

1783 ல் அமெரிக்கக் காலனிகள் பிரிட்டனிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றன, ஆனால் காட்டுச் சாலையை அமைப்பதற்கும், பூன்ஸ்பரோ நகரத்தை அமைப்பதற்கும் சன்மானமாக வாக்குறுதியளிக்கப்பட்ட 2000 ஏக்கர் நிலத்தை டேனியல் பெறவேயில்லை. புதிய சுதந்திர நாடான ஐக்கிய அமெரிக்க குடியரசைத் தோற்றுவித்தவர்கள் அந்நிலத்திற்கான ரிச்சர்ட் ஹெண்டர்சனின் உரிமைகோரலை அங்கீகரிக்கவில்லை.

டேனியல் பலமுறை அங்கிருந்து சென்று பல சாகசங்களை மேற்கொண்டிருக்கிறார். அவரது துணிச்சல்மிக்க செயல்களைக் குறித்த கதைகள் நாடு முழுவதும் பரவி இருந்தன.

அவர் குடியேற விரும்பிய பகுதியில் இருந்த இந்தியர்களுடன் நிறைய பிரச்சினைகளைச் சந்தித்தான். ஆனால் மற்ற குடியேற்றக்காரர்களைப் போலல்லாமல் அவர் ஒருபோதும் இந்தியர்களை வெறுக்கவோ, அஞ்சவோ செய்த்தில்லை. அவரது முதுமை வரை தொடர்ந்த நட்புணர்வை சில இந்தியர்களுடன் கொண்டிருந்தார்.

1820 ல் அவர் காலமான பிறகு டேனியல் பூன் மேலும் புகழ்பெற்றார். மேற்கு அமெரிக்க குடியேற்றக்காரர்களுக்கு, இந்த முன்னோடி நாயகன் சுதந்திர நிலத்திற்கும், புதிய வாய்ப்புகளுக்கும் அடையாளமாக இருக்கிறார், அவரது துணிவு, வேட்டைத்திறன் , புதிய பாதைகளை உருவாக்கும் குணம் மற்றும் இந்தியரகள் மேல் அவர் கொண்டிருந்த மரியாதை ஆகியவை என்றும் நினைவு கூறப்படும். இவரின் புதியவற்றை அறிவதற்கான ஆர்வம் மற்றும் எல்லைப்பகுதியில் வீடுகள் அமைத்தது ஆகியவை ஐக்கிய அமெரிக்க ஒன்றியம் மகத்தான நாடாக வளர உதவியது.

முக்கியமான தேதிகள்

1734— டேனியல் பூன் அக்டோபர் 22 ல் பிரிட்டிஷ் காலனியான பென்சில்வேனியாவில் எக்ஸிடர் குடியிருப்புப் பகுதியில் பிறந்தார்.

1750— பென்சில்வேனியாவிலிருந்து வடக்கு கரோலினாவிற்கு முதல் நீண்ட வேட்டைப் பயணத்தை மேற்கொண்டார்.

1756— ரெபெக்கா ப்ரெயனை மணந்தார்.

1757— அவரது 10 குழந்தைகளில் முதல் மகனான ஜேம்ஸ் பிறந்தான்.

1769– கென்டக்கி பகுதிக்கு சென்றது; ஷாவ்னீ இந்தியர்களிடம் பிடிபட்டது; அங்கிருந்து தப்பினார்.

1773 —கென்டக்கியில் குடியேறுவதற்கான தோல்விகரமான முயற்சியை மேற்கொண்டது; மகன் ஜேம்ஸ் இந்தியர் தாக்குதலால் இறந்தது.

1775— காட்டுச் சாலை அமைப்பதற்கான குழுவை வழிநடத்தியது; பூன்ஸ்பரோவை நிர்மாணித்தது; தனது குடும்பத்தை கென்டக்கிக்கு அழைத்து வந்தது.

1778— ஷாவ்னீ இந்தியர்களிடம் பிடிபட்டது; ஒருமாத காலம் அவர்களுடன் தங்கியது; அங்கிருந்து தப்பியது; ஷாவ்னீகளின் தாக்குதல்களிடமிருந்து பூன்ஸ்பரோவைக் காத்தது.

1784— டேனியல் பூனைக் குறித்த முதல் புத்தகமான “ The Adventures of Col.Danniel Boon” வெளியீடு (தொடக்க காலங்களில் அவரது பெயர் தவறாக எழுதப்பட்டது.)

1799— மிசோரிக்கு அவரது குடும்பம் மற்றும் மற்ற குடியேறிகளை வழிநடத்திச் சென்றது.

1820— மிசோரியில் செப்டம்பர் 26 ல் மரணம்.